# போர்களுக்கு அமைதிதான் தீர்வு

## பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தல்

ஓஸ்லோ, மே 18: மேற்காசிய போர், உக்ரைன்-ரஷியா இடையேயான போர்களுக்கு பேச்சுவார்த்தை மற்றும் ராஜீய வழிகளில் அமைதித் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் மோடி ஸ்வீடன் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, நார்வேக்கு சென்றுள்ளார். அங்கு தலைநகர் ஓஸ்லோவில் நார்வே பிரதமர் ஜோனஸ் கார் ஸ்டோரை சந்தித்துப் பேசினார். அப்போது தலைவர்கள், இரு நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த அதிக கவனம் செலுத்துவது என தீர்மானித்தனர்.

**மோதலுக்கு முடிவு:** அப்போது மோடி பேசியதாவது: இந்தியாவும், நார்வேயும் பேச்சுவார்த்தை, ராஜீய வழிகளில் நம்பிக்கை கொண்ட நாடுகள் ஆகும். எந்தப் பிரச்னைக்கும் போர் மூலம் தீர்வு காண முடியாது என்பதை இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

அது உக்ரைன் விவகாரமோ அல்லது மேற்காசிய போர் விவகாரமோ, எதுவாக இருந்தாலும் அங்கு விரைவில் மோதலை முடிவுக்கு கொண்டுவரவும், அமைதியை ஏற்படுத்தவும் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவு அளிக்கிறோம்.

சர்வதேச சவால்களுக்கு தீர்வு காணும் வகையில் சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதையும் இரு நாடுகளும் ஒப்புக் கொள்கின்றன. அதேபோல் பயங்கரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் அது வேருடன் அகற்றப்பட வேண்டும் என்பதிலும் உறுதி பூண்டுள்ளோம்.

**நார்வே உறுதுணை:** நான் கடந்த ஆண்டே நார்வே பயணம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. ஆனால், பஹல்காமில் நிகழ்ந்த பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தால் எனது பயணம் ஒத்திவைக்கப்பட்டது. பயங்கரவாத ஒழிப்பு விவகாரத்தில் இந்தியாவுக்கு நார்வே மிகவும் உறுதுணையாக இருந்தது. உண்மையான நட்புறவை இதன்மூலம் நார்வே வெளிப்படுத்தியது. இந்த ஆதரவுக்காக எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், இந்தியா தலைமையிலான இந்திய- பசிபிக் கடல்கள் அமைப்பில் நார்வே இணைய முடிவு செய்திருப்பதையும் வரவேற்கிறேன். கடல் பகுதியைக் கொண்ட 2 முக்கிய நாடுகள் என்ற முறையில் இந்தியா, நார்வே கடல்சார்ந்த பாதுகாப்பு, கடல் சார்ந்த பொருளாதாரம் உள்ளிட்டவற்றில் வலுவான ஒத்துழைப்பை ஏற்படுத்துவதில் இணைந்து பணியாற்ற முடியும் என்றார்.



நார்வே அரசர் 5-ஆவது ஹரால்டிடம் இருந்து நார்வேயின் மிக உயரிய விருதைப் பெற்ற பிரதமர் மோடி.

## மோடிக்கு நார்வே அரசு விருது

நார்வே நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடிக்கு, இந்தியா- நார்வே நட்புறவை மேம்படுத்த ஆற்றிய பங்களிப்புக்கும், தலைமைத்துவத்தையும் பாராட்டி, நார்வே நாட்டின் மிக உயரிய விருதாக கருதப்படும் 'கிராண்ட் கிராஸ் ஆப் தி ராயல் நார்வேயன் ஆர்டர் ஆப் மெரிட்' விருது வழங்கப்பட்டது. அந்த விருதை நார்வே அரசர் 5-ஆவது ஹரால்ட் வழங்கினார்.

இந்த விருது, பிரதமர் மோடிக்கு வழங்கப்படும் 32-ஆவது சர்வதேச விருது ஆகும். எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், பிரதமர் மோடி தனது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார்.

**KPR IAS Academy**
Learn Beyond
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# தமிழக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க முதல்வர் விஜய் ஆலோசனை

சென்னை, மே 18: தமிழகத்தில் வணிகச் செயல்முறைகளை எளிமைப்படுத்தி தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது தொடர்பாக முதல்வர் விஜய் சென்னை தொழில் வர்த்தக கூட்டமைப்பின் (எம்சிசிஐ) உயர்நிலைக் குழுவினருடன் திங்கள்கிழமை ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சென்னை தலைமைச் செயலகத்தில் தொழில் வர்த்தக கூட்டமைப்பின் உயர்நிலைக் குழுவினருடன் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் மற்றும் பரிந்துரைகளைக் கேட்டறிந்த முதல்வர், அவற்றுக்குத் தீர்வு காணும் வகையில் ஆவன செய்யப்படும் என்று தெரிவித்தார்.

மேலும், முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை உருவாக்க, எம்சிசிஐ தொடர்ந்து தனது ஒத்துழைப்பையும், வழிகாட்டுதலையும் வழங்குமாறு முதல்வர் கேட்டுக்கொண்டார்.



சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய்யை திங்கள்கிழமை சந்தித்துப் பேசிய சென்னை தொழில் வர்த்தகக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனத்தின் ஆலோசகர் ராம்குமார் சங்கர், துணைத் தலைவர் மற்றும் டெல்ஃபி டிவிஎஸ் தலைவர் ஏ.விஸ்வநாதன், சென்னை தொழில் வர்த்தகக் கூட்டமைப்பின் பொதுச்செயலர் கே.சரஸ்வதி.

இச்சந்திப்பில், எம்சிசிஐ தலைவர் மற்றும் கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனத்தின் ஆலோசகர் ராம்குமார் சங்கர், எம்சிசிஐ துணைத் தலைவர் மற்றும் டெல்ஃபி டிவிஎஸ் தலைவர் ஏ. விஸ்வநாதன் மற்றும் எம்சிசிஐ பொதுச் செயலர் கே. சரஸ்வதி ஆகியோர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ராம்கோ குழுமத்தினர் சந்திப்பு:** தமிழக முதல்வர் விஜய்யை ராம்கோ குழுமத்தின் உயர்நிலை அலுவலர்கள் திங்கள்கிழமை சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின்போது, ராம்கோ குழுமம் தமிழ்நாட்டில் மேற்கொண்டு வரும் பல்துறை சார்ந்த தொழில் செயல்பாடுகள் மற்றும் அந்நிறுவனத்தின் தொடர் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டதாகவும், தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சியில் ராம்கோ குழுமம் நீண்ட காலமாக வழங்கி வரும் பங்களிப்பை முதல்வர் பாராட்டினார் என்றும் தமிழக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தொழில் வளர்ச்சிக்குத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து முழு ஆதரவு அளிக்கும் என்று உறுதிப்படுத்திய முதல்வர், தமிழக அரசுடன் ராம்கோ குழுமம் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில், ராம்கோ குழுமத்தின் தலைவர் பி.ஆர். வெங்கட்ராமராஜா மற்றும் ராம்கோசிஸ்டம்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அபிநவ்ராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதி தொடரும்: மத்திய பெட்ரோலிய அமைச்சகம்

**புது தில்லி, மே 18:** அமெரிக்காவின் வரி விதிப்பு, பொருளாதார தடைகளை கடந்து நாட்டின் எரிசக்தித் தேவைகளுக்கேற்ப ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா தொடர்ந்து மேற்கொள்ளும் என மத்திய பெட்ரோலிய அமைச்சக இணைச் செயலர் சுஜாதா சர்மா திங்கள்கிழமை தெரிவித்தார்.



சுஜாதா சர்மா

உக்ரைன் போர் காரணமாக ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகள் மீதான வரியை அமெரிக்கா அதிகரித்தது. அதைத் தொடர்ந்து ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா படிப்படியாக குறைக்கத் தொடங்கியது. இந்தச் சூழலில் ஈரான் மீது கடந்த பிப்ரவரி மாதம் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியதால் உலகளவில் கச்சா எண்ணெய் விநியோகம் தடைபட்டுள்ளது.

இதை ஈடுசெய்ய ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு ஒரு மாதத்துக்கு மட்டும் தடைக்கு விலக்கு அளிப்பதாக அமெரிக்கா கடந்த மாதம் தெரிவித்தது. மே 16-ஆம் தேதியுடன் இதற்கான காலஅவகாசம் நிறைவடைந்த நிலையில், இதை நீட்டிப்பது தொடர்பாக அதிகாரபூர்வ தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

இதுதொடர்பாக சுஜாதா சர்மா செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது: அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளைக் கடந்து நாட்டின் எரிசக்தித் தேவைகளுக்கேற்ப ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா தொடர்ந்து மேற்கொள்ளும்.

நீண்ட கால தேவைகளைக் கருத்தில் கொண்டு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதால் தற்போது பற்றாக்குறையின்றி சீராக விநியோகிக்கப்பட்டு வருகிறது என்றார்.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# மின் நுகர்வோர் குறைகளுக்கு தீர்வுகாண முன்னுரிமை

## அதிகாரிகளுக்கு முதல்வர் விஜய் அறிவுறுத்தல்

சென்னை, மே 18: குறைந்த மின்னழுத்த பிரச்னை மற்றும் நுகர்வோரின் குறைகளுக்கு தீர்வுகாண முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று முதல்வர் விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய், மின்சாரம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் ஆர். நிர்மல்குமார், தலைமைச் செயலர் எம். சாய்குமார் ஆகியோர் பங்கேற்ற எரிசக்தித் துறை ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் மின் உற்பத்தித் திறன், மின் தேவை, மின் விநியோகம், நிதிநிலை மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்காலக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: 500 யூனிட்டுகளுக்குள் மின் பயன்பாடு இருக்கும் அனைத்து வீட்டு மின் இணைப்புகளுக்கும் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்துக்கு கடந்த மே 10-ஆம் தேதி முதல்வராக விஜய் பதவியேற்றவுடன் முதல் கையொப்பமிட்டார். இந்தத் திட்டச் செயலாக்கம் குறித்து இந்தக் கூட்டத்தில் முதல்வர் கேட்டறிந்தார்.

வேகமாக வளர்ந்து வரும் மாநகரத் தேவைகள், தொழில் வளர்ச்சி மற்றும் விவசாய உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் விவசாயத்துக்கு தடையில்லா மின்சாரம், தமிழ்நாடு மின்சார வாரியம் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை நிதி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சவால்களிருப்பினும் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

குறைந்த மின்னழுத்தம் உள்ளிட்ட அன்றாட நுகர்வோர் சார்ந்த குறைகளுக்கான காரணங்கள் மற்றும் தீர்வுகாணும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்பட வேண்டும். மாநிலத்தின் உச்சபட்ச மின் தேவையான 21,326 மெகாவாட்டை தடையின்றி மின்வாரியம் விநியோகம் செய்தது குறித்தும், மாநிலத்தின் கடந்த கால மின் பயன்பாடு, தற்போதைய மின் உற்பத்தி நிலவரம் மற்றும் தடையற்ற மின் விநியோகம் செய்ய மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் இக் கூட்டத்தில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

கோடை மற்றும் எதிர்வரும் பருவ மழைக்காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தேவையான மின் கம்பம், மின் கம்பிகள், மின் விநியோக மின்மாற்றிகள் உள்ளிட்ட அத்தியாவசிய மின் தளவாடங்கள் தேவையான அளவு முன்கூட்டியே இருப்பு வைப்பது குறித்தும் மின்துறை சார்பில் விளக்கமளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில், எரிசக்தித் துறை கூடுதல் தலைமைச் செயலர் மங்கத்ராம் சர்மா, மின் வாரியத் தலைவர் ஜெ. ராதாகிருஷ்ணன், நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மு.அ. சித்திக், பசுமை எரிசக்திக் கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் ம.கோவிந்த ராவ் மற்றும் அரசு உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு எரிசக்தித் துறை சார்ந்த ஆய்வுக் கூட்டத்தில் மின்சாரத் துறை அமைச்சர் ஆர்.நிர்மல்குமார், தலைமைச் செயலர் எம். சாய்குமார், எரிசக்தித் துறை செயலர் மங்கத் ராம் சர்மா, மின்வாரியத் தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன், நிதித் துறைச் செயலர் மு.அ. சித்திக், பசுமை எரிசக்திக் கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் ம.கோவிந்த ராவ்.

## புதிய துணை மின்நிலையங்கள் அமைப்பது குறித்து ஆலோசனை

தமிழகத்தின் மின் தேவையை பூர்த்தி செய்ய புதிய துணை மின்நிலையங்கள் அமைப்பது குறித்து முதல்வர் விஜய் ஆலோசனை நடத்தினார்.

மேலும், பழைய மின்கட்டமைப்புகளை நவீனப்படுத்துதல், புதிய மின்கம்பிகள் அமைத்தல் மற்றும் தென் மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் சூரிய மற்றும் காற்றாலை மின்சாரத்தை முழுவதுமாகப் பயன்படுத்தும் வகையில் பசுமை மின் வழித்தடம் உள்ளிட்ட தற்போது நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகளை விரைவுபடுத்துதல் குறித்தும் முதல்வருடன் ஆலோசிக்கப்பட்டது என்று தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.